**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.**
**முன்னிலை: திருமதி. T. நித்யகலா, B.Com., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.
**2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் செவ்வாய்கிழமை**

<u>மு.வ.எண்.67/2009</u>

1.சுப்ரமணியன்

2.குணசீலன்

..வாதிகள்

/எதிர்/

பரமசிவம்

.....பிரதிவாதி

இவ்வழக்கு 16.04.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.விஸ்வேஷ்வரன்அவர்கள் முன்னிலையாகியும், வாதியை அழைத்து ஆஜராகாததால், இன்று இந்நீதின்றம் கீழ்கண்டவாறு ஆணையிட்டு வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

வழக்குச் சொத்தை வாதி தன் மகன் குணசீலன் குடும்ப மேனேஜர் என்ற முறையில் அனுபோகம் செய்ய மேற்படியாருக்குள்ள உரிமையை விளம்பி இச்சொத்தை மேற்படியார் அவ்விதம் அமைதியாக அனுபோகம் செய்வதை எதிர்வாதியாவது அல்லது அவரது ஆட்ளாவது எவ்வகையிலும் தடை செய்யாது இருக்க மேற்படியார் பேரில் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், இவ்வழக்கு செலவு வாதிக்கு எதிர்வாதியால் கிடைக்கும்படிக்கும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி ஆஜர். வாதி தரப்பில் 1ம் பிரதிவாதியை குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை. வாதி தரப்பில் மெமோ தாக்கல் செய்யப்பட்டது. அந்த மெமோவில் வாதியின் வழக்கறிஞர் தமது வக்காலத்தை திரும்ப பெற்றுக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார். மெமோ பதிவு செய்யப்பட்டது. வாதி தரப்பு வழக்கறிஞர் வாதியிடமிருந்து எத்தகைய தகவலும் இல்லை என்று தெரிவித்தார். வாதியானவர் வழக்கை நடத்த தயாராக இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் என்னால் திறந்த வழக்கரங்கில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒப்பம்/நித்தியகலா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி.**
**முன்னிலை: திருமதி. T. நித்யகலா, B.Com., B.L.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திட்டக்குடி.

***2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16 ஆம் நாள் செவ்வாய்கிழமை***

*முு.வ.எண்.67/2009*

*1.திட்டக்குடி வட்டம், அடரி மற்றும் அஞ்சல், நடுத்தெருவில் வசிக்கும் கல்வராய சேர்வை குமாரர், இந்து சுமார் 54 வயதுள்ள சுப்ரமணியன் (குடும்ப மேனேஜர் என்ற முறையில்).*
*2.திட்டக்குடி வட்டம், அடரி மற்றும் அஞ்சலில் வசிக்கும் சுப்ரமணியன் குமாரர் இந்து சுமார் 32 வயதுள்ள குணசீலன்*

*.... வாதிகள்*

*/எதிர்/*

*பரமசிவம் த/பெ.பெரியசாமி, இந்து சுமார் 52 வயது, அடரி மற்றும் அஞ்சல், திட்டக்குடி வட்டம்.*

*...பிரதிவாதி*

வழக்குச் சொத்தை வாதி தன் மகன் குணசீலன் குடும்ப மேனேஜர் என்ற முறையில் அனுபோகம் செய்ய மேற்படியாருக்குள்ள உரிமையை விளம்பி இச்சொத்தை மேற்படியார் அவ்விதம் அமைதியாக அனுபோகம் செய்வதை எதிர்வாதியாவது அல்லது அவரது ஆட்ளாவது எவ்வகையிலும் தடை செய்யாது இருக்க மேற்படியார் பேரில் நிலைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கும்படிக்கும், இவ்வழக்கு செலவு வாதிக்கு எதிர்வாதியால் கிடைக்கும்படிக்கும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு தாக்கல் செய்த நாள் 30.04.2009 வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.1000/- அதற்கு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் சட்டம் பிரிவு 25(பி)ன் படி ரூ.75.50/- நீதிமன்றக் கட்டணமாகச் செலுத்தப்பட்டுள்ளது. 01.08.1990 மற்றும் 15.03.2009 ஆகிய தேதியில் அடரி கிராமத்தில் வழக்கு மூலம் ஏற்பட்டுள்ளது.

இவ்வழக்கு 16.04.2024 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்து வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.பாலச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.விஸ்வேஷ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், வாதியை அழைத்து ஆஜராகாததால், இன்று இந்நீதின்றம் கீழ்கண்டவாறு ஆணையிட்டு வழங்கும்...

## தீர்ப்பாணை

1.வாதி ஆஜராகி வழக்கை நடத்த தயாராக இல்லாத காரணத்தினால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

2.செலவுத் தொகைப் பற்றி உத்தரவு இல்லை.

## செலவுத்தொகைப் பட்டியல் விபரம்

(இரு தரப்பில் செலவுத் தொகைப்பட்டியல் தாக்கல் இல்லை)

## சொத்து விபரம்

திட்டக்குடி வட்டம், அடரி கிராமத்தில் அ.பு.ரி.ச.85/9 ஏக்கர் 0.58 செண்ட். இச்சொத்து தற்போது கீழ்கண்டவாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1.பு.எண்.85/9ஏ | 0.08.0ஏர்ஸ் | தீர்வை 0.34 காசு |
| 2.பு.எண்.85/9பி | 0.08.0ஏர்ஸ் | தீர்வை 0.34 காசு |
| 3.பு.எண்.85/9சி | 0.07.5ஏர்ஸ் | தீர்வை 0.32 காசு |

இதிலுள்ள மாவடை மரங்கள் உள்பட.

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ஆம் நாள் என் கையொப்பமும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

(ஒப்பம்/நித்தியகலா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திட்டக்குடி.

முதன்மை <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திட்டக்குடி</u>

<u>மதிப்பு சீட்டு</u>
***<u>67/2009</u>***

| | | |
|---|---|---|
| *1.* | சட்டப் பிரிவு | *25 (பி)* TNCF Act |
| *2.* | வழக்கின் தன்மை | விளம்புகை மற்றும் நிலைக்கால உறுத்துக்கட்டளை |
| *3.* | தீர்வை மதிப்பு | ரூ.*1000/*- |
| *4.* | சந்தை மதிப்பு | - |
| *5.* | நீதிமன்ற கட்டணம் | ரூ.*75.50/*- |

/உத்தரவுபடி/

தலைமை எழுத்தர்
முதன்மை மாவட்ட உரிமையில் நீதிமன்றம்,
திட்டக்குடி.